பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை 25.09.2022 கதிர் 211

## தொடர்ந்து அதிகரிக்கும் பொருள்களின் விலைகள்

இலங்கையில் மரக்கறிகள், மீன் உட்பட பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் கட்டுப்பாட்டு விலை இல்லாததால், வியாபாரிகள் பல்வேறு விலைகளுக்கு பாண் விற்பனை செய்கின்றனர் என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். சில பிர தேசங்களில் பாண் ஒன்றின் விலை 2

# நல்லூரில் தியாகி திலீபனை நினைவேந்தி உண்ணாவிரதம்





யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. இந்த அடையாள உண்ணாவிரதம் இன்று மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

தியாக தீபத்தின் நினைவேந்தல் தமிழர் தாயகம் உள்ளிட்ட தரணியெங்கும் நடைபெற்று வரும் நிலையில் - நாளை திங்கட்கிழமை இறுதி நாள் நிகழ்வு இடம்பெறவுள்ள நிலையில் இன்று நல்லூரில் திலீபனின் நினைவிடத்தில் அடையாள உண்ணா விரத்தில் பலர் இருக்கின்றார்கள். 2

## சர்வாதிகார வெறியை உடனடியாக நிறுத்துக!

### அரசிடம் அநுர வலியுறுத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷ அரசும் முன்னெடுத்து வரும் 2

## கலவரத்தின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

### நாமல் கூறுகின்றார்



தேசிய பாதுகாப்பு என்பது நாட்டுமக்களின்பாதுகாப்பாகும். அதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்குக் காணப்படுகிறது. எனவே தான் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளன. கலவரத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எவரேனும் முயற்சிப்பார்களாயின் அந்த முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 2

# யாழ். பல்கலையிலிருந்து திலீபனின் ஊர்திப் பவனி

## நாளை காலை நல்லூரைச் சென்றடையும்





(ந.லோகதயாளன்)

தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி யாழ்ப்பாணம் 2

## சர்வதேசத்தின் ஆதரவை எதிர்பார்க்கும் இலங்கை

### ஐ.நா. பொதுச் சபையில் அலி சப்ரி எடுத்துரைப்பு




ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இலங்கை எதிர்பார்க்கின்றது என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கை நேரப்படி இன்று (25) அதிகாலை 2.30 மணியளவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஐக்கிய நாடுகள் 2

## இலங்கைக் குடிமக்களாக சகலருக்கும் சம உரிமையே

### ஜனாதிபதி ரணில் உறுதி



இலங்கை ஜனநாயக நாடு. இங்கு வாழும் சகல இனத்தவர்களுக்கும், அனைத்து மதத்தவர் களுக்கும் சம உரிமைகள் கிடைத்தே ஆக வேண்டும். எனவே, நாட்டில் இன ரீதியில் 2


## ஷின்ஷோ அபேவுக்கு ரணில் நேரில் அஞ்சலி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றிரவு ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ 2

## நந்திக்கடல், நாயாறு, சாம்பல் தீவு பகுதிகள் வனப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம்



வடக்கில் நந்திக்கடல், நாயாறு மற்றும் கிழக்கில் சாம்பல் தீவு உள்ளிட்ட பகுதிகளை வனப் பாதுகாப்பு வலயங்களாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் விவசாயத்துறை மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தின் சாம்பல் தீவு, வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு, நந்திக்கடல் உள்ளிட்ட பிரதேசங்களே வனப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் மேற்கொள்ளும் பல்வேறு 2

## மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இயங்குகின்ற மாகாண சபைகள்

### சட்டவிரோதமானவை என்று தேசப்பிரிய விசனம்



நாட்டில் பொதுமக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை முன்னெடுத்துச் செல்வது சட்டவிரோத செயலாகும் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மக்கள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு அரச நிறுவனத்தையும் மக்கள் பிரதிநிதி ஒருவர் இல்லாமல் கொண்டு செல்வது குற்றமாகும். உள்ளூராட்சி சபைகள், தேர்தல் இன்றி ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களால் செயற்படுத்தப்படுவது, பொது மக்களின் அடிப்படை உரிமை மீறலாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தநிலையில் கடந்த காலங்களில் தேர்தல் நடத்தப்படவில்லை என மக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவை தூற்றினர்.

எனினும், நீதிமன்றத்துக்குச் சென்றதும், நாடாளுமன்றினால் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

## நல்லூரில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, நாளை திங்கட்கிழமை பல பாகங்களில் இருந்தும் ஊர்திகள் நல்லூருக்குப் பவனி வர இருக்கின்றன. அனைத்து ஊர்திகளும் காலை 10 மணிக்கு முன்பதாக நல்லூர் தியாக தீபம் திலீபனுடைய நினைவாலயத்தை வந்தடையும்.

தியாக தீபம் திலீபன் உயிர் பிரிந்த காலை 10.48 மணிக்கு மலரஞ்சலி இடம்பெறவுள்ளது.

இதன்போது மக்கள் பெரும் எழுச்சியாக வரவேண்டும். வாகன ஊர்திகள், தூக்குக் காவடிகளை எங்கள் உறவுகள் காலையில் இருந்து அவற்றை கொண்டு வரலாம்.

தியாக தீபம் திலீபன் பிறந்த ஊரெழுவிலிருந்து ஊர்தி நல்லூர் நினைவாலயத்தை நோக்கி வந்தடைய இருக்கின்றது.

இந்த ஊர்திகளுடன் இணைந்து பயணித்துக் கொண்டு பொதுமக்கள் வரவேண்டும் - என்று நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

## ஷின்ஷோ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபேவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் பங்கேற்பதற்காக அவர் அங்கு செல்கின்றார்.

ஜப்பானில் நீண்ட காலம் பிரதமராக இருந்த ஷின்ஸோ அபே கடந்த ஜூலை 8ஆம் திகதி இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தநிலையில் ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த நாட்டு அரச தலைவர்கள் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

வெளிநாட்டு கடன்மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுக்கு ஏனைய கடன் வழங்குநர்களான இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை ஒருங்கிணைக்க ஜப்பானுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளது என்று முன்னதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நந்திக்கடல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் காரணமாக நாயாறு மற்றும் நந்திக்கடல் குளங்கள் மாசுபடுகின்றன. கழிவுகளால் அந்தக் குளங்கள் நிரம்பியுள்ளன. அந்தவகையில் சதுப்பு நிலங்கள் மற்றும் குளம் சார்ந்த உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் மேற்படி பகுதிகளைப் பாதுகாக்கும் வகையில் நிலைமையை ஆய்வு செய்வதற்காக விசேட குழு ஒன்றை நியமிக்கவுள்ளோம்.

அந்தக் குழுவிடமிருந்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும் - என்றார்.

பழைய முறையில் அல்லது புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மாகாண சபை முறைமை கொண்டு செல்ல வேண்டுமாயின் மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் - என்றார்.

## தொடர்ந்து..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

220 ரூபாவாக உள்ளது என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பிரதான சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அறுவடை குறைவால், பிரதான சந்தைகளுக்கு மரக்கறிகளின் வருகை குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன என்று வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதான சந்தைகளில் மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளன என்று வர்த்தகர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சந்தைக்கு மீன் பொருட்கள் கிடைப்பது தற்போது குறைந்த அளவிலேயே உள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, 5 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று லங்கா சதொச அறிவித்துள்ளது.

இந்த விலை குறைப்பு இம்மாதம் 30ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் எனக் கூறப்பட்ட போதிலும் சில சதொச கிளைகளில் இதுவரை பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## கலவரத்தின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பி னர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய சபை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து சபாநாயகர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவானது மக்கள் மத்தியில் கீழ் மட்டத்திலிருந்து ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் சிறந்த அனுவபத்தைக் கொண்டுள்ள கட்சியாகும்.

இது தொடர்பில் கட்சி மட்டத்திலும், தேசிய சபையிலும் பேச்சுகளை முன்னெடுத்து உரிய நடவடிக்கைகளை எடுப்போம். ஏனைய கட்சிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்காமை அவரவரின் தனிப்பட்ட தீர்மானமாகும்.

இது தொடர்பில் சபாநாயகருடன் கலந்துரையாடி அவர்கள் தீர்மானங்களை எடுப்பர் - என்றார்.

## சர்வாதிகார..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக விரோத அடக்குமுறைச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

-இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக தேடிய அறிய மருதானை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த போதே அவர் இதனை ஊடகங்களிடம் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளே தள்ள வேண்டியவர்கள் வெளியில். வெளியில் இருக்க வேண்டியவர் உள்ளே இருக்கின்றனர். இதுமிகவும் அமைதியான ஆர்ப்பாட்டம். எவரும் சீர்குலைக்கும் வகையில் நடந்துக்கொள்ளவில்லை.

ரணில் விக்ரமசிங்கவும் ராஜபக்சவினரும் நாட்டின் ஜனநாயகத்தை முழுமையாகக் குழித்தோண்டிப் புதைத்து அச்சத்தில் பதுங்கு குழிகளில் வாழும் தலைவர்களாக மாறவே திட்டங்களை வகுத்துள்ளனர்.

இதனால், மிக மோசமான, ஜனநாயக விரோத சர்வாதிகார வெறியை உடனடியாக நிறுத்துமாறு நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ராஜபக்ச அரசுக்கும் கூறுகின்றோம்.

ரணில் தரப்பினர் இன்று இதனைத் தடுத்து நிறுத்தி இருக்கலாம். எதிர்காலத்தில் கொழும்புக்கு வரப்போகும் இலட்சக்கணக்கானவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது.

85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக மக்களை அணித்திரட்டுவோம்.

இதனால், மக்களுக்கு அஞ்சி ஒழியும் இடங்களைத் தேடிக்கொள்ளுமாறு ரணிலுக்கும் தாக்குதல் நடத்துபவர்களுக்கும் நாங்கள் கூறுகின்றோம் - என்றார்.

## சர்வதேசத்தின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் சபையின் 77 ஆவது அமர்வில் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வளரும் நாடுகள் மற்றும் அவற்றின் பொருளாதாரங்கள் மிகுந்த ஆபத்தில் உள்ளன. அரசுகள் நிதிச் சரிவை எதிர்கொள்ளும் போது போதுமான மூலதனத்துக்கான அணுகல் இல்லாததால், மக்கள் அதிகரித்து வரும் வறுமையை எதிர்கொள்கின்றனர். வேலையின்மை, பசி மற்றும் கல்வி சீர்குலைவு ஏற்படுகின்றன.

எமது நாடு அரசியல், சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரி நிற்கின்றது.

பொருளாதார சீர்திருத்தங்கள் மூலம் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் அளவிலான புரிதலை எட்டியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கை எதிர்கொள்ளும் வெளி மற்றும் உள் சவால்கள் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

கருத்துச் சுதந்திரம் புனிதமானது, சட்டத்தின் வரம்புகளுக்குள் செயற்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் கொரோனாத் தொற்றுநோய் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு தீவு தேசமாக, கடல்களில் ஏற்படும் மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்.

இலங்கை உயர் மனித அபிவிருத்திப் பிரிவில் 191 நாடுகளில் 73 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கை பல தசாப்தங்களாகப் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் தீவிர சித்தாந்தங்களை எதிர்ப்பதற்குச் சட்டமியற்றும் நடவடிக்கைகளும் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் பொறிமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்குப் பங்களிக்கும் வகையில், அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இலங்கை தனது பங்களிப்பை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளது - என்றார்.

## யாழ்.பல்கலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தில் இருந்து இன்று ஊர்திப் பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகத்திலிருந்து இந்த ஊர்திப் பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'அகிம்சைநாயகனின் கொள்கையில்' எனும் தொனிப்பொருளில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம், இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக் கான சர்வதேச நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, பௌத்த சிங்களமயமாக்கலை நிறுத்து முதலிய விடயங்களை வலியுறுத்தி தியாக தீபம் திலீபனின் ஊர்திப் பவனி இன்று முற்பகல் 11 மணிளவில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமானது.

தியாக தீபத்தின் நினைவேந்தலின் 11ஆவது நாள் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் அமைக்கப்பட்ட பிரதான நினைவாலயத்தில் இடம்பெற்று ஊர்திப் பவனி ஆரம்பமானது.

திலீபனின் நினைவுருவப் படத்தைத் தாங்கிய ஊர்தியோடு மாணவர்கள் சிவப்பு, மஞ்சள் வர்ண எழுச்சிக் கொடிகளை தாங்கிய வண்ணம் கால்நடையாகவும், சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் பேரணியாக வலம் வருகின்றனர்.

ஊர்திப் பவனி வரும் பகுதிகளில் தியாக தீபத்தின் கோரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் பல்கலைக்கழக மாணவர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஊர்திப் பயணிக்கவுள்ளதுடன், நாளை காலை நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினை வாலயத்தை அது சென்றடையவுள்ளது.

## இலங்கைக்..........

மத (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சகல தரப்பினருடனும் சுமுகமாகப் பேசி விரைவில் தீர்வு காண்போம்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருந்தூர் மலை விவகாரம் மற்றும் திருக்கோணேஸ்வரம் விவகாரம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இடையில் எழுந்துள்ள கருத்து மோதல்கள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இனவாத, மதவாத ரீதியில் கருத்துக்களை வெளியிடுவோர் நாட்டின் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு இனத்தவர்களும் தங்களுக்குரிய முழுமையான உரிமைகளைக் கோரி நிற்பார்கள். அதேவேளை, ஒவ்வொரு மதத்தவர்களும் தங்கள் மத உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

எனவே, இன, மத ரீதியில் எழும் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலமே தீர்வுகாண வேண்டும். அதைவிடுத்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு பிரச்சினைகளைப் பெரிதுபடுத்த எந்தத் தரப்பினரும் முயலக்கூடாது – என்றார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீர்வுக்கு மனோ காட்டும் வழி!

ஆஸ்திரேலியாவுக்கு சென்றிருக்கும் தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மெல்போர்ன் நகரில் சிங்கள மக்கள் மத்தியில் உரை நிகழ்த்திய சமயம் ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற மாதிரி ஆஸ்திரேலியாவில் நீங்கள் பெற்ற சிறப்பு இலங்கையில் உங்கள் மக்களும் பெற வேண்டுமானால் உங்களுடைய இச்சிறப்புக்கு காரணமான அடிப்படை யாது என்ற செய்தியை உங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள் என்பதுதான் மனோ கணேசன் அந்த மக்களுக்கு எடுத்துரைத்த வழிகாட்டல்.

சிங்கள, பௌத்த நாடு என்ற நிலையில் இருந்து, இலங்கை பன்மைத்துவ நாடாக சட்டப்படி மாற வேண்டும். அதுதான் நிரந்தர அமைதிக்கும், நீடித்த சமாதானத்துக்கும், நிலையான நல்லிணக்கத்துக்கும் ஒரே மார்க்கம் என்ற உண்மையை ஆஸ்திரேலிய சிங்கள மக்கள் தங்கள் வாழ்வானுபவப் பாடமாக இங்கு பட்டறிந்துள்ளமையால் அதனை தாய் நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கும் பட்டவர்த்தனமாக எடுத்துரைக்க வேண்டும் எனக் கோரியிருக்கின்றார் மனோ கணேசன்.

"இங்கே ஆஸ்திரேலிய பன்மைத்துவ சூழலில் சந்தோஷமாக வாழும் நீங்கள், உங்களது தாய்நாடு மாத்திரம், ஒரு மதம், ஒரு இனம் என்ற ஏகபோக சிங்கள, பௌத்த நாடாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது." – என்றார் அவர்.

"சமீபத்தில், இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் பெருமளவில் சிங்கள மக்களாலேயே நடத்தப்பட்டன. சிற்சில இடங்களில் தமிழ், முஸ்லிம் இளைஞர்களும், மக்களும் இணைந்திருந்தனர். ஆனால் பொதுவாக சிங்கள மக்களின் போராட்டமாகவே இவை நடந்தன.

"இலங்கையில் நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்ற போது, அவற்றுக்கு ஆதரவாக உலகெங்கிலும் உள்ள சிங்கள புலம்பெயர் மக்களும் வீதிகளில் இறங்கினீர்கள்.

"இந்த சிங்கள மக்களுக்கு இன்று பாரிய பொறுப்பொன்று உள்ளது. உங்களுக்கு நான் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் வாழும் நாடுகளில் உள்ள பல்கலாசார விருந்தோம்பல்களை நீங்கள் அனுபவிக்கிறீர்கள். இங்கே சந்தோஷமாகவாழ்கிறீர்கள். இங்கே ஆஸ்திரேலிய அரசாங்கமே முன்வந்து, உங்களது சிங்கள மொழிக் கலாசாரம் உட்பட சுமார் 68 மொழி கலாசாரங்களை வளர்த்து விடுகிறது.

"இங்கே பன்மொழி, பல்லின, பன்மத கலாச்சாரம் ஒரு சுமையாகக் கருதப்படாமல், ஒரு வர்ணமய சாதகமாக கொண்டாடப்படுகிறது. அரசாங்க கொள்கையாகவே முன்னெடுக்கப்படுகிறது.

"இந்த பன்மைத்துவச் செய்தியை நீங்கள் இலங்கையின் சிங்கள தலைவர்களிடம் எடுத்து செல்லுங்கள். அது உங்கள் கடமை.

"ஒரு சிங்கள, பௌத்த நாடு என்ற நிலையில் இருந்து இலங்கை, ஒரு பன்மைத்துவ நாடு என்ற நிலைமைக்கு சட்டரீதியாக மாற வேண்டும். அப்படி மாறுவதிலேயே இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மீட்சி இருக்கிறது. இந்தப் பாரிய பொறுப்பு வெளிநாடுகளில் வாழும் சிங்கள இலங்கையர்களிடம் இருக்கிறது."

– மனோ கணேசனின் இந்தச் செய்தியே தீர்வுக்கு ஒரேவழி!

# யார் ஜனாதிபதியாக இருந்தாலும் மின்கட்டணத்தை குறைக்கமுடியாது!

## அத்துரலியே ரத்ன தேரர் சவால்



தற்போதையபொருளாதாரசூழ்நிலையில் யார் ஜனாதிபதியாக இருந்தாலும் மின் கட்டணத்தை குறைக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

மின்சார கட்டணம் குறைக்கப்பட்டால் திறைசேரிக்கு 1000 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும் என்றும் அத்துரலியே ரதன தேரர் குறிப்பிட்டார்.

இப்பிரச்சினைக்கு பிரதான காரணம் மின்சார சபை எனவும்,வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் செய்யாமல் அந்த சபைக்கு முன்பாக போராட்டம் நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மின்சார சபையால் சில காலங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படாமையால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தொல்காப்பியர் சிலை வவுனியாவில் திறப்பு!



வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரியில் தொல்காப்பியர் சிலை நேற்று (சனிக்கிழமை) திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் பா.கமலேஸ்வரி தலைமையில் முதன்மை அதிதியாக வலயக் கல்வி பணிப்பாளர் சு.அன்னமலர் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தொல்காப்பியரின் சிலையை ஆசிரியர் சு.சிவச்சந்திரன் திறந்து வைத்ததோடு அதனைத் தொடர்ந்து அவரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி கௌரவம் செலுத்தப்பட்டது.

மேலும் நிகழ்வில் கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன், உயர்தர பரீட்சையில் உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

# தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியினால் முன்னாள் போராளிகளுக்கு உலருணவு!

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியால் முன்னாள் போராளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நேற்று (சனிக்கிழமை) இந்த நிகழ்வு கிளிநொச்சியில் உள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் கலந்து கொண்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட 40 முன்னாள் போராளிகளுக்கு உலருணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான ஏரோஃப்ளோட் விமான சேவை மீள ஆரம்பம்

ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி முதல் மொஸ்கோவிற்கும் கட்டுநாயக்கவிற்கும் இடையிலான விமான சேவைகளை மீள ஆரம்பிக்க ஏரோஃப்ளோட் விமான நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனிதா ஏ.லியனகே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கச்சா எண்ணெய் விலை குறைந்தது

உலக சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.74 அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

அதேவேளை பிரண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.15 டொலர்களாக பதிவாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொரோனாவைப் போல உலகை அச்சுறுத்தும் புதிய கோஸ்தா வைரஸ் ரஷ்யாவிலிருந்து பரவல்







2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் தொற்று இன்றுவரை உலகம் முழுவதும் பரவி பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற நிலையில், ரஷ்ய நாட்டில் இருக்கும் வௌவால்களில் இருந்து மனிதர்களுக்கு பரவும் புதிய வகை வைரஸ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய வௌவால்களில் கொவிட்-19 போன்ற வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கோஸ்தா வைரஸ் என அடையாளம் காணப்பட்டுள்ள இந்த வகை தொற்று SARS-CoV-2 போன்ற கொரோனா வைரஸ்களின் துணை வகையைச் சேர்ந்தது என்றும், இது மனித உயிரணுக்களை பாதிக்கும் திறன் கொண்டது என்றும் தெரிவித்துள்ளனர்.

கொரோனாவை போல எதிர்வரும் காலத்தில் பற்பல வைரஸ் பாதிப்புகள் நேரலாம் எனக் கூறப்பட்டு வரும் நிலையில் இந்த ரஷ்ய வகை வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சற்று அச்சத்தை உண்டாக்கியுள்ளது. கொரோனா போலவே சர்பெகோ வைரஸ் வகையை சேர்ந்த ரஷ்ய வைரஸ் தொற்றும் சுவாசப் பாதையை பாதிக்கச் செய்யக்கூடியதாகவும், இதுவும் தொடர்ச்சியாக உருமாறிக் கொண்டே இருக்கக் கூடியதாகவும் அறியப்பட்டிருக்கிறது.

குறிப்பாக ரஷ்யா வௌவால்களில் இருந்து பரவும் இந்த கோஸ்தா வைரஸின் முதல் வகை மனிதர்களை அவ்வளவாக அச்சுறுத்தவில்லை என 2020ல் வொஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முதலில் கண்டுபிடித்திருந்தார்கள். ஆனால், கோஸ்தா 2 என வகை நிச்சயமாக மனிதர்களிடத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் என்றும், மனிதர்களின் செல்களை பாதித்து பேராபத்தை ஏற்படுத்தச் செய்யலாம் என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடனேயே இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்க பயன்படுத்தப்பட்ட தடுப் பூசிகள் எவையும் இந்த கோஸ்தா வகை வைரஸிற்கு ஒத்துழைக்கா என்றும், இது இந்த அளவுக்கு பெரிய வித்தியாசமானதாக, மாறு பட்டதாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். ஏனெனில், கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களை சோதித்து பார்த்த போது அவை ரஷ்ய வகை வைரஸிற்கு எதிராக போராடவில்லை என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்ததால் கோஸ்தா 2 வைரஸ்

மனிதர்களிடத்தில் பரவினால் மீண்டுமொரு பேரபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சரணடையும் ரஷ்ய வீரர்களுக்கு தண்டனை என புடின் அறிவிப்பு

## மன்னிப்பு என்கிறார் உக்ரைன் தலைவர்



மாஸ்கோ,செப்.25

உக்ரைன் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது. அதன் ஒரு பகுதியாக ரஷ்ய இராணுவத்திற்கு படைகளை திரட்டும் பணியில் அந்நாட்டு அரசு ஈடுபட்டு வருகிறது. மேலும் சுமார் 3 லட்சம் படை வீரர்களை திரட்ட ரஷ்ய இராணுவம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் உக்ரைனிடம் ரஷ்ய இராணுவ வீரர்கள் தாங்களாக சரணடைந்தால், கடும் தண்டனை விதிக்கப்படும் என ரஷ்ய அதிபர் புடின் எச்சரித்துள்ளார். ரஷ்ய வீரர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட கட்டளைகளைப் பின்பற்றாவிட்டாலோ, சண்டையிட மறுத்தாலோ, தானாக சரணடைந்தாலோ அவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கும் சட்டத்திற்கு அதிபர் புடின் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதே சமயம் இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, ரஷ்ய வீரர்கள் சரணடைய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அவ்வாறு சரணடையும் ரஷ்ய வீரர்கள் பொது மக்களைப் போன்று நடத்தப்படுவார்கள் என ரஷ்ய மொழியில் ஜெலன்ஸ்கி உறுதியளித்துள்ளார்.




# வடகொரியா திடீர் ஏவுகணைச் சோதனை அமெ. போர் கப்பல் வருகைக்குப் பதிலடி

சியோல்,செப்.25

குறுகிய தொலைவு இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையை வடகொரியா சோதனையை திடீரெனச் செய்துள்ளது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச்செல்லும் - கண்டம் விட்டு கண்டம் பாயும் - ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா, குறிப்பாக, தன் எதிரி நாடுகளாகக் கருதும் தென் கொரியா மற்றும் அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

இதனிடையே, அணு ஆயுத வல்லமை பெற்ற அமெரிக்காவின் விமானம் தாங்கி போர் கப்பல் நேற்று முன் தினம் தென் கொரியாவுக்கு வந்தடைந்தது. இராணுவப் பயிற்சிக்காக அமெரிக்க போர் கப்பல் தென் கொரியா வந்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க போர் கப்பலின் தென் கொரிய வருகைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரியா நேற்று ஏவுகணை சோதனை செய்துள்ளது. குறுகிய தொலைவு இலக்கை தாக்கி அழிக்கும் வகையிலான ஏவுகணையை ஏவி வடகொரியா சோதனை செய்துள்ளது. இந்த தகவலை தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க விமானம் தாங்கி போர் கப்பலில் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக வடகொரியா ஏவுகணை சோதனை நடத்திய சம்பவத்தால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# மெதினா நகரில் பூமிக்கடியில் ஏராளமான தங்கம், தாமிரமாம்

*ரியாத், செப்.25*

*சவுதி அரேபியாவின் மெதினா நகரில், பூமிக்கு அடியில் ஏராளமான தங்கம் மற்றும் தாமிரம் உள்ள இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன என அந்நாடு கூறியுள்ளது. இது தொடர்பாக சவுதி புவியியல்ஆராய்ச்சி அமைப்பு கூறுகையில், மெதினா பிராந்தியத்தில் அபா அல் ரஹா பகுதியில் தங்க படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.*

*அதே பிராந்தியத்தில் அல் மதீக் பகுதியில் நான்கு இடங்களில் தாமிரப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்டுபிடிப்பு மூலம், உலகிற்கு நம்பிக்கையான முதலீட்டிற்கான கூடுதல் வாய்ப்புகளை தருகிறோம் எனக் கூறப்பட்டுள்ளது.*

*தங்கம் மற்றும் தாமிரம் கண்டுபிடிப்பு மூலம், சவுதி பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் மூலம் 533 மில்லியன் டிலர் முதலீடு மற்றும் 4 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும்க ணிக்கப்படுகிறது.*

# கன்னியாகுமரியில் கடல்நீர் உள்வாங்கியதால் பரபரப்பு



கன்னியாகுமரியில் கடல் திடீரென உள்வாங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. கடல் உள்வாங்கியதால் கடற்கரைக்கு வந்த சுற்றுலா பயணிகள் கடலில் இறங்கி கால் நனைக்க அச்சப்பட்டனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலைக்கு பிறகு கன்னியாகுமரி கடலில் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அமாவாசை மற்றும் பௌர்ணமி போன்ற முக்கியமான நாள்களில் கன்னியாகுமரி கடலில் இந்த இயற்கை மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. கடல் சீற்றம், கொந்தளிப்பு, உள்வாங்குவது, நீர்மட்டம் தாழ்வது, நீர்மட்டம் உயர்வது என பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் நேற்று இரவு கன்னியாகுமரியில் கடல் திடீர் என்று உள்வாங்கி காணப்பட்டது. சுமார் 50 அடி தூரத்துக்கு கடல் உள்வாங்கி இருந்தது. இதனால் கடலுக்கு அடியில் இருந்த பாறைகள் மற்றும் மணல் திட்டுகள் வெளியே தெரிந்தன. இதை பார்த்துப் கடற்கரைக்கு வந்த சுற்றுலா பயணிகள் கடலில் இறங்கி கால் நனைக்க அச்சப்பட்டனர்.

ஆனால் எந்தவித அச்சமுமின்றி மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்கு மீன்பிடிக்க சென்று விட்டு கரைக்கு திரும்பினர். கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கம சங்கிலித்துறை பகுதியில் கடல் உள்வாங்கி இருந்தாலும் கன்னியாகுமரியில் வங்கடல் பகுதியில் கடலின் தன்மை இயல்பு நிலையில் காணப்பட்டதால் கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு இன்று காலை 8 மணிக்கு வழக்கம் போல் படகு போக்குவரத்து தொடங்கி நடைபெற்று வருகிறது. சுற்றுலா பயணிகள் படகில் ஆர்வமுடன் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டு வருகிறார்கள்.

அதே சமயம் கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித்துறை கடற்கரை பகுதியில் கடல் உள்வாங்கி நீர்மட்டம் தாழ்ந்து காணப்பட்டதால் சுற்றுலா பயணிகள்ஆனந்த குளியல் போட முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர்.

# 40 ஆண்டுகளில் இல்லாத வெயில்நேற்றுக்கடலூரில்

கடலூர்,செப்.25

தமிழகத்தில் கடந்த 40 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத வகையில், நேற்று கடலூர், புதுச்சேரியில் 100 டிகிரி வெயில் பாரன்ஹீட் பதிவானது.



தமிழகத்தில் கோடை காலமான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அதிகபட்ச வெயில் இருக்கும். அதன் பின், படிப்படியாக வெயில் குறைந்து, மிதமான வெயில், மழைத் தூறல் இருக்கும்.கடலூர், புதுச்சேரியில் கடந்த 8 ஆம் திகதி வரை, அடிக்கடி மழை பெய்து வந்தது. அதன் பின்னர் மழை பொழிவது நின்றது.

தொடர்ந்து கடும் வெயில் காரணமாக பகல் நேரத்தில் மக்கள் வெளியில் தலைகாட்ட முடியாமல் வீட்டிற்குள் முடங்கினர்.

இதற்கிடையே, கடந்த 11 ஆம் திகதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவி வந்தது. அதன் காரணமாக கடலூர் உள்ளிட்ட துறைமுகங்களில் முதலாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. காற்றழுத்த தாழ்வு காரணமாக காற்றில் ஈரப்பதம் குறைந்தது. வழக்கமாக செப்டம்பர் மாதங்களில் அதிகபட்சமாக 90 டிகிரி பாரன்ஹீட் வெயில், சில நாள்களில் மழை என பருவ நிலை கலந்திருக்கும். அதனால் இந்த காலங்களில் வெயிலை மக்கள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக கடும் வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத வகையில், நேற்று அதிகபட்சமாக கடலூரில் 99.8 டிகிரியும், புதுச்சேரியில் 100.4 டிகிரி வெயிலும் பதிவானது.நேற்று காலையிலேயே வெயில் 100 டிகிரியை தொட்டதால் மக்கள் புழுக்கத்தினால் அவதிப்பட்டனர். இதுபோன்ற அதிகபட்ச வெயில் தமிழகத்தில் வேறு எங்கும் பதிவாகவில்லை.

இது குறித்து வானிலையாளர் பாலமுருகன் கூறுகையில், 'கடந்த 40 ஆண்டு கால வரலாற்றில் இது போன்ற காலங்களில் அதிகபட்சமாக 100 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவானது கிடையாது. இதற்கு காரணம், வடக்கு திசையில் இருந்து வறண்ட காற்று தொடர்ந்து வேகமாக வீசிக்கொண்டிருக்கிறது. இதனால், வெப்பம் அதிகரித்து உள்ளது. வழக்கமாக இந்த மாதங்களில் அதிகபட்சமாக 93 டிகிரி வரை தான் வெயில் இருந்துள்ளது' என்றார்.



# பெருமளவு போதைப் பொருள் மிசோரமில் கைப்பற்றப்பட்டது

புதுடெல்லி,செப்.25

மிசோரமில் அசாம் ரைபிள் படையினர் நடத்திய அதிரடி வேட்டையில் 67கோடி 87 லட்சம் ரூபா (இந்தியப் பணம்) மதிப்பிலான போதை பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மிசோரமின் சாம்பை மாவட்டத்தில் மெல்புக் கிராமத்தில் அசாம் ரைபிள் படை மற்றும் ஜொக்காவ்தர் பொலிஸார் கூட்டாக இணைந்து, இரகசியத் தகவலின் அடிப்படையில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

இதில், வாகனம் ஒன்றில் சந்தேகத்திற்குரிய வகையில் பெண் ஒருவர் அந்த பகுதியில் சுற்றி திரிந்துள்ளார். அவரைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டதில், அவரிடம் 55.80 கிலோ எடை கொண்ட 5.05 லட்சம் போதை பொருட்கள் அடங்கிய மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றின் சந்தை மதிப்பு ரூ167.86 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது என போலீசார் இன்று தெரிவித்து உள்ளனர். இதனை தொடர்ந்து அவற்றை பறிமுதல் செய்த பொலிஸார், பெண்ணையும் கைது செய்து விசாரணைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கூறியுள்ளனர்.

கடந்த காலங்களிலும், இதுபோன்ற போதை பொருள்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் ஆகியவற்றின் சட்டவிரோத கடத்தலை அசாம் படையினர் அதிரடியாக முறியடித்து உள்ளனர். அண்டை நாடான மியான்மரில் ஏற்பட்டு உள்ள உள்நாட்டு குழப்பத்தினால், எல்லை வழியே நாட்டுக்குள் அகதிகளாக வருபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, தொடர்ந்து இதுபோன்ற சட்டவிரோத கடத்தல்களும் அதிகரிக்கின்றன என அதிகாரப்பூர்வ தகவல் தெரிவிக்கின்றது.

# அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து ம.தி.மு.கவினர் ஆர்ப்பாட்ட முஸ்தீபு

சென்னை,செப்.25

இந்திய மத்திய அமைச்சர் அமிதாவைக் கண்டித்து வரும் 6 ஆம் திகதி ம.தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக அதன் தலைவர் வைகோ அறிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் சிறுபான்மைப் பிரிவுச் செயலாளர் முராத் புகாரி மறைவு காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட, இந்தி எதிர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டம், மீண்டும் அடுத்த மாதம் 6 ஆம் திகதி மாலை நடைபெற உள்ளது. அமித்ஷாவின் இந்தி வெறி பேச்சுக்கு - போக்குக்கு - கண்டனம் தெரிவிக்கவும், அரசமைப்புச் சட்டத்தின் 8 ஆவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் இந்திக்கு இணையான ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் வருகிற 6 ஆம் திகதி (வியாழக்கிழமை) மாலை 4 மணிக்கு என்னுடைய தலைமையில் நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழ் உணர்வாளர்களையும், கழகத்தினரையும் அன்புடன் அழைக்கிறேன். - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கு விளையாட்டு விழாவில் மட்டு. மாவட்டம் சாம்பியனானது





(ஹஸ்பர்)

47 ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணைவாக நடத்தப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டு விழாவினுடைய சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை வெற்றிவாகை சூடிக்கொண்டது.

கிழக்கு மாகாண விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த 22,23 ஆம் திகதிகளில் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பநாள் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து சிறப்பித்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். இவ்விளையாட்டு விழாவில் கிழக்குமாகாணத்தினுடையபலசாதனைகள் புதுப்பிக்கப்பட்டன.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200க்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர். பெண்களுக்கான மெய்வன்மை போட்டிகளில் 2 ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் தெரிவாகின.

ஆண்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளில் 2 ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும. முதல் இடத்தை திருகோணமலை மாவட்டமும் தட்டிச் சென்றன.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் 2 ஆம் இடத்துக்கு அம்பாறை மாவட்டமும் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்ற வீரவீராங்கனைகளுக்கு கிழக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சினுடைய செயலாளர் எச். ஈ. எம்.டபிள்யூ . ஜீ. திஸாநாயக்க சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டுகேடயங்களையும்சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.





# மட்டு. மிக்கேல் கல்லூரியின் மாணவர்களின் நடைபவனி!

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 149 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பாடசாலைச் சமூகத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் நடைபவனி நேற்று இடம்பெற்றது.

இந்நடைபவனியில் பாடசாலை மாணவர்கள்,பழைய மாணவர்கள்,அதிபர்,மற்றும் ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை வளாகத்திலிருந்து ஆரம்பமான நடைபவனியானது பிரதான வீதியூடாக கல்லடி பாலம் வரை சென்று,பின்னர் திருமலை வீதியையடைந்து,மீண்டும் மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக பாடசாலையை வந்தடைந்தது.

இதில் குறித்த கல்லூரி மாணவர்களின் சாதனைகளை வெளிக்கொணரும் வகையில் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட கிண்ணங்கள் ஊர்திகளில் வலம் வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வசமய சம்மேளன அம்பாறை தலைவர் டாக்டர் ஜமீல் மறைவு



(வி.ரி சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளன தலைவரும், சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கை பேரவையின் அம்பாறைத் தலைவருமான சாய்ந்தமருதைச் சேர்ந்த டாக்டர் எம்.ஜ.எம். ஜெமீல் தனது 80 ஆவது வயதில் நேற்று சனிக்கிழமை காலமானார்.

சாய்ந்தமருது பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவராகவும்ஏனைய பலஅமைப்புகளின் முன்னணித் தலைவராகவும் செயற்பாட்டாளராகவும் இருந்து இனமதபேதம் கடந்த பல சேவைகளை செய்தவர்.

இறுதியாக 'தடங்களில் நினைவுகள்' என்ற சுயசரிதை நூலையும் வெளியிட்டவர் .

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் சமுகத்தில் கண்ணியமாகப் பார்க்கப் பட்டவர் . அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் நேற்று இரவு சாய்ந்தமருது மயானத்தில் நடைபெற்றது.





# சமுர்த்தி திணைக்களத்தால் மரநடுகை வேலைத் திட்டம்

(க.கிருபாகரன்)

சமுர்த்தி திணைக்களத்தினால் 'சமுர்த்தி பசுமை நிற தாயக அறுவடை' எனும் தொனிப்பொருளில் தேசிய மரநடுகை தின சுற்றாடல் வேலைத்திட்டம் நேற்று முன்தினம்மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றது.

சமுர்த்தி திணைக்களத்தினால் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டு இம்மரநடுகை வேலைத்திட்டம் இடம் பெற்றது. அந்த வகையில், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வவுணதீவு பொது மயானத்தில் நிழல் மரங்கள் நடப்பட்டன. பிரதேச செயலகம், சமுர்த்தி வங்கிகளின் வளாகம் போன்றவற்றில் பயன்தரும் பழ மரக் கன்றுகளும் நடப்பட்டன. பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.தங்கத்துரை, வங்கி வலய முகாமையாளர் ஏ.பிரியதர்சினி, சமுதாய அமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# வாசிகசாலை திறந்துவைப்பு







(ஹஸ்பர்)

கிண்ணியா ஜாவா வாசிகசாலை பெரியாற்றுமுனை பிரதேசத்தின் ஜாவா ஜும்ஆ பள்ளிவாயலில் நேற்று சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

கிண்ணியா நகர சபையின் உறுப்பினர் நிசார்தீன் முஹம்மட்டின் அனுசரணையோடு கிண்ணியா நகர சபையின் கீழ் இயங்கும் ஒரு கிளையாக இவ்வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டது.

இத் திறப்பு விழா நிகழ்வில் கிண்ணியா நகரசபை தவிசாளர் எம்.எம்.நிவாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார். மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கில் இவ் வாசிக சாலை திறந்து வைக்கப்பட்டது.

சிறப்பு அதிதிகளாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி, ஜோர்தான் நாட்டின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் சட்டத்தரணி அப்துல் லாபிர்,அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனின் தலைவர் கஸ்ஸாலி முகம்மட் பாத்திஹ் நகரசபை உறுப்பினர்களான எம்.ஐ.எம். நிசார்தீன், எம்.எம்.மஹ்தி ஆகியோரோடு மேல்நீதிமன்ற பதிவாளர் எம்.எஸ்.எம்.நியாஸ் முன்னாள் பிரதம நூலகர் சபருள்ளாஹ் கான் என பல முக்கியஸ்த்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இவ் விழா ஜாவா ஜும்மா மஸ்ஜிதின் ஏற்பாட்டில் பெரியாற்றுமுனை சனசமூக நிலையத்தின் அனுசரணையோடும் இடம் பெற்று இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# சி.வி. மற்றும் கஜேந்திரகுமார் தேசிய பேரவையில் இணைந்தமை தமிழர்களை ஏமாற்றுகின்ற செயல்!

## சாணக்கியன் எம்.பி. விசனம்



தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாதுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தேசிய பேரவையில் இணைந்து கொண்டுள்ளமை தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்துதிரட்டும் நடவடிக்கை நேற்று (சனிக்கிழமை) களுத்துறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ராஜித்த சேனாரத்ன மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பிபெரேரா, சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இரா.சாணக்கியன் இவ்வாறு விசனம் வெளியிட்டுள்ளார்.

சி.வி விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்கின்றமை தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந் தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிப்பொத்தானையில் இலவச வைத்திய முகாம்





(ஹஸ்பர்)

திருகோணமலை, முள்ளிப் பொத்தானை ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் PSSP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலவச வைத்திய முகாம் ஒன்று நேற்று சிராஜ் நகர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் 35 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமாக இரத்த பரிசோதனை, காது, பல் , கண் பரிசோதனை மற்றும் நீரிழிவு, இருதய நோய், புற்று நோய், சிறு நீரக நோய் போன்ற தொற்றா நோயில் இருந்து பாதுகாக்கவும் இலவச மருத்துவ சேவை இடம்பெற்றது.

'வரும் முன் காப்போம்' என்ற தொனிப் பொருளின் கீழ் இடம் பெற்ற இந்த வைத்திய முகாமில் சிராஜ் நகர் கிராம சேவையாளர் ஏ.முனாஸ், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## 'திருகோணமலை தமிழர் பேரவை' புதிய கட்டமைப்பு பற்றி அறிவிப்பு




(ஹஸ்பர்)

திருகோணமலையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு என 'திருகோணமலை தமிழர் பேரவை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

திருகோணமலையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை பாதுகாப்பதற்கு சரியான தலைமைத்துவமோ அமைப்போ இருப்பது துரதிஷ்டவசமே என தமிழர் பேரவை அமைப்பின் புதிய அங்குரார்ப்பண வைபவம் திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போது அதன் செயற்பாட்டாளர்கள் கூட்டாக தெரிவித்தனர்.

"தமிழர் பேரவையின் அங்குரார்ப்பண வைபவம் 15 செயற்பாட்டாளர்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது ஊடகங்களுக்கு கூட்டாக அதன் செயற்பாட்டாளர்கள் கோரிக்கையை முன்வைத்தனர். தமிழ் மக்களுக்கு இங்கு பல பிரச்சினைகள் உள்ளன. காணி, கல்வி, சமூகம், கலை,கலாசாரம், வரலாறு போன்றனவற்றை ஒட்டி பல விடயங்கள் உள்ளன. இவற்றை ஒரே குரலில் வெளிக்கொண்டு வருவதற்காக இந்த பேரவையை உருவாக்கியுள்ளோம். அனைவரும் ஒரே குரலில் ஒன்றிணைந்து இன, மத முரண்பாடுகளற்ற வகையில் உரிமைகளை பாதுகாக்கப் பல நடவடிக்கைகளில் செயற்படவுள்ளோம். நாளாந்தம் எமது சமூகம் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது. மக்களுடைய பிரச்சினைகளை நாமே முன்னின்று பாதுகாக்க வேண்டும்" – எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## முட்டைக்கு தட்டுப்பாடு வரலாம்

பண்ணைக்குத் தேவையான கோழிகளின் இறக்குமதி குறைவடைந்துள்ளதால் எதிர்காலத்தில் முட்டைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போது பண்ணைகளுக்கு சொந்தமான கோழிகளும் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றன என அதன் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

கோழிப்பண்ணை உற்பத்திக்குத் தேவையான கோழிகளின் இறக்குமதி 80 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். தற்போதைய சூழ்நிலையில் கோழிப்பண்ணை தொழிலின் எதிர்காலம் தொடர்பாகத் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# 10 ஆயிரம் பேருக்கு மலேசியாவில் வேலை! கடத்தல்காரர்கள் குறித்து மனுஷ எச்சரிக்கை



மலேசியாவில் வேலை வழங்குவதாகக் கூறி விண்ணப்பங்கள் மற்றும் தகவல்களைச் சேகரிக்கும் கடத்தல்காரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மலேசியாவில் இருந்து இந்த நாட்டுக்குக் கிடைக்கும் 10 ஆயிரம் வேலை வாய்ப்புகள் தொடர்பாக பல்வேறு தொடர்புகளை முன்னிலைப்படுத்தி விண்ணப்பங்கள் மற்றும் தகவல்களை சேகரிக்கும் பணியில் கடத்தல்காரர்கள் ஏற்கனவே செயற்பட்டு வருகின்றனர் என அமைச்சர் கூறினார்.

மலேசியாவில் பணிக்கு அனுப்பப்படும் இலங்கையர்களிடம் இருந்து எவ்வளவு பணம் வசூலிக்கப்படும் என்பது தொடர்பாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2022இல் வெளியிடப்பெற்றது.